5th November 1966]

திரு. வை. சங்கரன் : ஸார், நம் மாநிலத்தில் இந்தப் பால் பண்ணைத் தொழிற்சாலையை வைப்பதில், பால் கிடைப்பதில் லீன் பீரியட், சர்ப்ளஸ் பீரியட் என்று இருக்கின்றன ; சர்ப்ளஸ் பீரியட்டில் கிடைக்கக் கூடிய பாலை வைத்துத் தொழிற்சாலை நடத்தும் முறையில் அது போன்ற திட்டமாவது தயாரிக்கப் படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர்களுக்குத் தெரியும். லீன் பீரியட்டில் சர்ப்ளஸ் பீரியட் பாலை வைத்துக் கொண்டு உபயோகிக்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். பத்தாயிரம் லிட்டர் சர்ப்ளஸ் பீரியட்டிலேயே கிடைக்கும் இடம் தமிழ் நாட்டில் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சபாநாயகர் அவர்களே, விண்ணப்பித்திருக்கும் தனியார், பண்ணை நடத்தித் தானே பாலை உற்பத்தி செய்துகொள்ளத் தயாராக இருக்கிறார். அவருக்கு உடனடியாக லைசென்ஸ் கொடுத்து, பின் தங்கியிருக்கும் கூடலூரை முன்னுக்குக் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்தான் முன் வர வேண்டும். நாங்கள் உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

Inventions promotion

* 434 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to provide fillip to those who evolve import substitutes and improved techniques in industry, by presenting them with suitable awards?

THE HON. SRI R. VENKATARAMAN : The State Government do not have any such proposal. But the Inventions Promotion Board organised by the Government of India, afford financial assistance in the form of grants or monetary awards to deserving cases.

திரு. வை. சங்கரன் : ஸார், மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றி நாமும் இதுபோன்ற ஊக்கமளிக்கும் நடவடிக்கையை எடுத்துக் கொள்ள முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ட்யூப்ளிகேஷன் ஆஃப் எஃபர்ட் ஆகும்.

Manufacture of asbestos

* 435 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number and details of existing plants and the plants proposed to be set up in the State, for the manufacture of asbestos-sheets and other asbestos based products like asbestos textile yarns, packing cloth, mill board and jointing sheets?

THE HON. SRI R. VENKATARAMAN : Messrs. Asbestos Cement, Ltd. at Podanur is under production, with an annual capacity of 36,455 tonnes of asbestos sheets and pipes.

Messrs. Southern Asbestos Cement, Ltd., has obtained a licence to set up a unit near Arkonam to produce the same materials to a capacity of 35,000 tonnes. Another firm, viz.,

Messrs. Lloyds Insulations (Madras) has been granted a letter of intent to set up a unit in Madras to produce annually 800 tonnes of asbestos moulded thermal insulation articles and 600 tonnes of asbestos yarn, packings, cloth and tapes.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ராஜ்யத்தினுடைய தேவை எவ்வளவு ? தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் இருக்கிறதா ? அல்லது உற்பத்தி செய்யப்படும் ஆஸ்பெஸ்டாஸ் எல்லாவற்றையும் சென்ட்ரல் பூல் ஆக வைத்து எல்லா ராஜ்யங்களுக்கும் வினியோகிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவாக எல்லா ராஜ்யங்களுக்கும் வினியோகிக்கப்படுகிறது. அந்தந்த ராஜ்யத்திற்கென்று தனியாகக் கிடையாது.

Vanaspathy Industry

* 436 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start a Vanaspathy Industry on co-operative basis in the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : சார், இம்மாதிரி சர்க்காரிலே ஒரு உத்தேசம் இருந்து பின்னாலே அது கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுவும் இல்லை.

திரு. மு. சண்முகம் : சார், விழுப்புரத்தில் சுமார் 45 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் வனஸ்பதி தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது. 7-8 ஆண்டுகளாக துவக்கப்படத் தகுதியுள்ளதாக இருந்தும் துவக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தும், நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையாவது செய்யவேண்டும் என்று சொல்லியும் இது வரையில் நடைபெறவில்லை. இந்தத் தொழிற்சாலை நடைபெறுமானால் அந்த வட்டாரத்தில் உள்ள மணிலா வியாபாரிகளுக்கு பாதகம் ஏற்படும் என்ற புகாரை அவர்கள் அரசாங்கத்திற்குச் செய்து கொண்டிருக்கிறார்களா ? இந்தத் தொழிற்சாலையை கூட்டுறவு அடிப்படையில் அரசாங்கம் ஏன் எடுத்து நடத்துவதற்கு முன்வரக்கூடாது ? இனியாகிலும் அந்த ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விழுப்புரத்தில் உள்ள தொழிற்சாலையை அதனுடைய முதலாளிகள், உரிமையாளர்கள், போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் நடத்த முடியவில்லை